அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 193 /2016
தேதி : 24.12.2016

## கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வாழ்த்து.

அன்பு என்ற அறவழியில் இந்த உலகம் அமைதியாகவும், வளமாகவும் இருக்க தன்னையே அர்ப்பணித்துக்கொண்டவர் தான் இயேசு கிறிஸ்து. இவருடைய பிறந்த நாளை உலகெங்கும் உள்ள கிறிஸ்துவர்களால் மகிழ்ச்சியோடு கொண்டாடப்படுகிறது.

தீவிரவாதம், பிரிவினைவாதம், விட்டுக்கொடுக்காமை இவைகள் அனைத்தையும் அன்பால் மட்டுமே வெல்லமுடியும் என்பதால்தான், அனைவரும் அன்பாகவும், ஒற்றுமையாகவும் இருக்கவேண்டும், "பகைவரையும் அன்பு செய்" "உன்னைப்போல் பிறரையும் நேசி" "ஏழைகளிடம் இரக்கம் காட்டு" "மன்னிப்பு" போன்ற போதனைகளை இறைமகன் இயேசு கிறிஸ்து தன் வாழ்நாளில் வாழ்ந்துகாட்டினார்.

போர், வன்முறை, போட்டி, பொறாமை, பயங்கரவாதம் போன்ற தீமைகள் நிறைந்த இவ்வுலகில், இவற்றையெல்லாம் களைத்தெரிய இயேசு கிறிஸ்து போதித்தவற்றை பின்பற்றி சமத்துவத்தை நிலைநாட்டுவதுதான் ஒரே வழி. கிறிஸ்துமஸ் திருநாளில் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பு செய்து ஒரு புதிய "மாற்றத்தை நோக்கி" செல்வதற்கு உறுதியேற்போம். உலகெங்கும் உள்ள அனைத்து கிறிஸ்துவர்களுக்கும் என் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜாதி, மொழி, இன, பேதமின்றி புதிய சமுதாயத்தை உருவாக்க பாடுபடுவோம்....

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்